மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

85—

நெல் கொள்முதல் நிலையம்

***28755—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, தூசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கூடுதலாக புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள செய்யாறு தொகுதி, தூசி கிராமத்தில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், உறுப்பினர் அவர்கள் வேறு ஏதேனும் கூடுதலாகக் கேட்கிறாரா என்று தெரியவில்லை. அப்படி உறுப்பினர் அவர்கள் கேட்கும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி தேவதை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி, அறிவுத் திறனில்

2019 ஜூலை 11]

அண்ணாவையும், கொடை அளிப்பதில் புரட்சித் தலைவரையும், ஆட்சியின் மாட்சியில் அம்மாவின் வழியிலும் விளங்கும், எட்டு கோடி தமிழ் மக்களின் உயர்வுக்காக உழைத்துக்கொண்டிருக்கின்ற, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக கழகத்தையும், ஆட்சியையும் வழிநடத்தி வருகின்ற தமிழகத்தினுடைய மாண்புகள் நிறைந்த துணை முதலமைச்சர் அண்ணன் தேனியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேள்வி வருவதற்கு முன்பாகவே தூசிக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை அமைத்துக் கொடுத்து, அதற்குண்டான கட்டடங்களையும் அமைத்துக் கொடுத்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டத்தின் தலைமையிடமான வெம்பாக்கம் ஊராட்சி பகுதிவாழ் வேளாண் பெருமக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்ற வகையில், நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்றினை அமைத்து அதற்குத் தேவையான கட்டடங்களையும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் கடந்த 8 ஆண்டுகளில் 122 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 320 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதில் திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை 12 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதில், உறுப்பினர் சார்ந்த செய்யாறு தொகுதியில் மட்டும் 4 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள், தனது தொகுதியான வெம்பாக்கம் ஊராட்சியில் ஒரு புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென இங்கே கோரிக்கை வைத்துள்ளார்கள். அவருடைய கோரிக்கை, தேவையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோளை ஏற்று, என்னுடைய கோரிக்கையை ஏற்று கண்டிப்பாகக் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சுமார் 7,500 சுமை தூக்குபவர்களும், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமார் 10,000 நபர்களும் அதிகபட்சம் 40 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகின்றனர். மத்திய உணவுக் கழகத்தில், Food Corporation of India-*ல் பணியாற்றி வரும் சுமை தூக்குவோர்களைப் பணி நிரந்தரம் செய்ததுபோல, இவர்களையும் பணி நிரந்தரம் செய்து பணிப் பாதுகாப்பு வழங்க அரசு முன்வருமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு ஆவன செய்வாரா? நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர்* ATM Centre-*ஐப் போல 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற முதலமைச்சர்.* ATM *என்றால்* Automated Teller Machine, *தானியங்கி இயந்திரம் செயலாற்றுவதைப்போல செயலாற்றுகின்ற நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக பணியாற்றுகின்ற முதலமைச்சர், அம்மாவினுடைய வழியிலே வந்த இந்த முதலமைச்சர் எந்த கோரிக்கையையும் ஏற்று செய்கின்ற நிலையில் இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று,*

2019 ஜுலை 11]

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றுகின்ற சுமை தூக்கும் தொழிலாளர்களைப் பற்றி ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். சுமை தூக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 10 வருடங்கள் பணி முடித்தவர்களுக்கு பச்சை அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. 10 வருடங்களுக்குக் குறைவாகப் பணியாற்றியவர்களுக்கு இளஞ்சிவப்பு அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கும் குறைவாக பணியாற்றி இருக்கிறவர்களுக்கு அட்டை ஏதும் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களாக அவர்கள் பணிபுரிகிறார்கள். கிட்டத்தட்ட 20,028 சுமை தூக்கும் தொழிலாளர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு இணையாக மூட்டை தூக்குவோருக்குரிய சம்பளம் தவிர, வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, வாரம் ஒரு நாள் மற்றும் ஆண்டுக்கு 10 நாட்கள் சம்பளத்துடன்கூடிய விடுப்பு, அதேபோல பண்டிகை விடுப்பு, bonus, கருணைத் தொகை, பொங்கல் பரிசு போன்ற சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், 6 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் வரை காப்பீடும் அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, தொழிற்சங்கப் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதில், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, அவர்களுடைய சம்பள விகிதம் மாற்றியமைக்கப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு 20 சதவிகிதம் அவர்களுக்கு கூடுதலாக சம்பளம் கொடுக்கப்பட்டது. அதேபோல நாளையிலிருந்து அவர்களுக்கு 29 சதவிகிதம் சம்பளம் கூடுதலாக வழங்கப்பட இருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

கால்நடை மருத்துவமனை

***7407—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், அ. கலையம்புத்தூர் ஊராட்சி, இராஜபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, அ. கலையம்புத்தூர் ஊராட்சி, இராஜபுரம் கிராமத்தில் 364 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கே கால்நடை கிளை நிலையமோ, கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடை மருத்துவமனையோ துவங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அ. கலையம்புத்தூர் ஊராட்சி கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதி. நான் கேட்டிருக்கின்ற கேள்வியில், மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற இராஜபுரம் பகுதி, பழனி மேற்கு ஒன்றியத்தைச் சார்ந்த*